# சுற்றுலாத்துறை – அறிவிப்புகள்

## 2 0 1 4 – 2 0 1 5

**1. மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஸ்ரீரங்கத்தில் அண்மையில் திறக்கப்பட்ட "யாத்ரி நிவாஸ்" அமைந்துள்ள பஞ்சக்கரை சாலையில் மின் விளக்கு அமைத்தல்.**

108 திவ்ய தேசங்களில் முதலாவதாக விளங்கும் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி கோவிலுக்கு தினந்தோறும் வருகை தரும் எண்ணற்ற பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி ஸ்ரீரங்கத்தில் அண்மையில் திறக்கப்பட்ட "யாத்ரி நிவாஸ்" அமைந்துள்ள பஞ்சக்கரை சாலையில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** மின்விளக்கு வசதிகள் சுமார் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**2. திருச்சிராப்பள்ளியில் உள்ள மலைக்கோட்டையில் வெள்ள ஒளி விளக்குகள் (Flood Lights) அமைத்தல்**

திருச்சிராப்பள்ளி, அருள்மிகு உச்சிப்பிள்ளையார் திருக்கோயிலுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்கள் நலன் கருதி இத்திருக்கோவில் அமைந்துள்ள மலைக்கோட்டையில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** சுமார் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வெள்ள ஒளி விளக்குகள் அமைக்கப்படும்.

**3. ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் சுற்றுலாத் தலங்களில் உள்கட்டமைப்பு மேம்பாடு**

தமிழ்நாடு சுற்றுலாத் துறையில் உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டத்திற்காக (IDIPT-TN) ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் ரூபாய் **66** கோடி **86** இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள திட்டப் பணிகளை உள்ளடக்கிய **9** துணைத் திட்டப் பணிகள் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** விரைவில் துவங்கப்படும்.

**4. தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களில் தூய்மை குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் பாரம்பரிய வளங்கள் சேதமடைவதைத் தடுத்தல் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி தலா 10 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.**

**5. "தகவல் பதிவி" ( Pen Drive ) தயாரித்தல் மற்றும் விளம்பர முகாம்**

தமிழ்நாடு சுற்றுலாவின் வணிகச் சின்னத்தை (Brand promotion) பிரபலப்படுத்தும் நோக்கமாக சுற்றுலா குறும்படம் "**தகவல் பதிவி**" (Pen drive) **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்படும். மேலும் 2014–2015 ஆம் ஆண்டில் கொல்கத்தா, மும்பை, புதுதில்லி, அகமதாபாத் போன்ற முக்கிய இடங்களில் சிறப்பு விளம்பர முகாம்கள் சுமார் 23 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

**6. புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல்**

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள விராலிமலையில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**7. வேலூர் மாவட்டம், திருப்பாற்கடலில் உள்ள பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோவில் மேம்பாடு**

வேலூர் மாவட்டம் திருப்பாற்கடலில் உள்ள அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோவில் பகுதியில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ரூபாய் **25** இலட்சம் மதிப்பீட்டில் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**8. வேலூர் மாவட்டம், ஏலகிரியில் உள்ள யாத்ரி நிவாஸ் கட்டிடத்தை தமிழ்நாடு ஓட்டலாக மாற்றுதல்**

வேலூர் மாவட்டம், ஏலகிரியில் உள்ள யாத்ரி நிவாஸ் கட்டடத்தை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஓட்டல் தமிழ்நாடு என மாற்றி அமைக்கப்படும்.

**9. தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு மேம்பாடு**

திருச்செந்தூரில் இயங்கி வரும் ஓட்டல் தமிழ்நாடு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ரூபாய் **1** கோடி **82** இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

**10. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக படகு குழாம்களுக்கு புதிய படகுகள் வாங்குதல்.**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான படகு குழாம்களை மேம்படுத்தும் வகையில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 81** புதிய படகுகள் ரூபாய் **65** இலட்சம் மதிப்பீட்டிலும், படகு குழாம்களில் உள்ள படகுகளுக்கு **32** புதிய அவுட்போர்டு மோட்டார்கள் (Out Board Motors) ரூபாய் **92** இலட்சம் மதிப்பீட்டிலும் வாங்கப்படும்.

**11. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் சுற்றுலாவிற்கு ஐந்து புதிய சொகுசுப் பேருந்துகள் வாங்குதல்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ரூபாய் 1 கோடி 70 இலட்சத்தில் ஐந்து புதிய சொகுசுப் பேருந்துகள் மொத்தம் வாங்கப்படும்.

**எஸ்.பி.சண்முகநாதன்**
சுற்றுலாத்துறை அமைச்சர்